1982 பிப்ரவரி 11]

தனியாக தொழில் நடத்தும் மருத்துவர்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்வதற்கான அனுமதி.

*வினா எண். 150—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியாகத் தொழில் நடத்தும் மருத்துவர்கள் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய அனுமதிக்கப்படுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தகுதி பெற்ற மருத்துவர் மற்றும் சார் நிலை பணியாளர்கள் பணியாற்றிவரும் தூசி புகாததும், சுகாதார முறையோடு கூடிய துப்புரவான சூழ்நிலையில், அறுவை சிகிச்சைக்குத் தேவையான கருவிகளுடன் கூடிய, தகுதிகளை உடைய தனியார் மருத்துவ மனைகளுக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்ய அனுமதி வழங்கப்படுகின்றது.

திரு. து. புருஷோத்தமன் : சென்ற ஆண்டு நம் மாநிலத்தில் எவ்வளவு பேருக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்யப்பட்டது ? தனியாகத் தொழில் நடத்தும் டாக்டர்கள் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சைகள் எத்தனை செய்தார்கள் ?

மாண் மிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அப்ரூவ்டு சர்ஜரி லிஸ்ட் டிஸ்ட்டிரிக்ட் வைஸாக இருக்கிறது. சென்னையில் 19 இடங்கள், கோவையில் 50 இடங்கள், மதுரை மாவட்டத்தில் 26 இடங்கள்—நீண்ட பட்டியல் ஒட்டுமொத்தமாக 218 இடங்களில் ஏறத்தாழ 4 சதவிகிதம் ஆப்பரேஷன் தனியார் துறையில் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன் : இந்தத் திட்டத்திற்காக அரசு உதவித் தொகையாக எவ்வளவு தொகை கொடுக்கிறதோ அதை இடைத் தரகர் மூலம் கொடுக்காமல் நேரடியாக தனிப்பட்ட டாக்டர்களுக்குத் கொடுத்தால் அவர்களுக்கு ஊக்கம் ஏற்பட்டு அதிகமான அறுவை சிகிச்சை செய்ய ஏதுவாக இருக்கும். தற்போது தனிப்பட்ட டாக்டர்கள் குடும்பநல அறுவை சிகிச்சை செய்வதற்குப் பதிலாக கருச் சிதைவை அதிகமாகச் செய்கிறார்கள். அதைத் தடுத்து இதற்கு அதிகமான ஊக்கம் கொடுக்க அரசிடம் திட்டம் உண்டா ?

[1982 பிப்ரவரி 11

[முற்பகல் 9–40]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கருத்தடைக்கு அகில இந்திய அளவிலே ஒரு சட்டம் மெடிக்கல் டெர்மினேஷன் ஆப் பார்க்[illegible]ஸி ஆக்ட் என்ற சட்டம் இருக்கிறது. அதை எம்.டி.பி. என்று சொல்வார்கள். அதன்படி அதை அரசு மருத்துவ மனைகளிலே செய்யலாம், அதே நேரத்திலே தனியார் மருத்துவ மனைகளிலேயும் செய்யலாம்; அதற்கென்று தொகை கொடுப்பதில்லை. டியூபெக்டமி, வாசக்டமிக்கு மட்டும் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவ மனையிலே ஒரு குறை இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சரியாகத் தொகை கொடுப்பதில்லை, தாமதமாக வருகிறது என்ற குறைபாடு இருந்தது. இண்டியன் மெடிக்கல் அசோசியேஷன் ரெப்ரசன்டேடிவ்ஸை கலந்துகொண்டு தற்போது அப்படிப்பட்ட குறைபாடு இல்லாமல் அதே நேரத்திலே தவறுகளும் இல்லாமல் கண்காணிக்கவும் ஆப்பரேஷன் செய்கிறவர்களுக்கு தாமதம் இல்லாமல் உடனடியாகப் பணத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனையிலே பணியாற்றுகின்ற மருத்துவர்கள் தனியாக தொழிலை நடத்துவதைத் தடை செய்வதற்கான குறிப்பு ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இது கொள்கைப் பிரச்சினை. கேள்வி நேரத்திலே கொள்கைப் பிரச்சினை பற்றி பேசக்கூடாது. இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது என்றாலும் இந்த மானியக் கோரிக்கை வருகிறபோது அதைப்பற்றிப் பேசலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: சைனாவிலே ஒரு குழந்தைக்கு மேல் பெறக்கூடாது என்று இருக்கிறது. அங்கே பிறப்பு விகிதம் 2.1 சதவீதத்திலிருந்து 1.2 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. சைனாவிலே நடந்த அந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு மாநாட்டிலே நம்முடைய கொறடா கலந்து கொண்டார்கள். அவர்கள் இதைப்பற்றி ஏதாவது திட்டம் கொடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். 2-க்குப் பிறகு எப்போதும் வேண்டாம் என்ற கோஷம் 1-க்குப் பிறகு எப்போதும் வேண்டாம் என்று மாற்றப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

[982 பிப்ரவரி 11]

திரு. கி.சட்டநாத கரையாளர்: தலைவர் அவர்களே, வாசக்டமி செய்வதற்கும் மெடிக்கல் டெர்மினேஷன் ஆப் பர்க்னன்ஸி செய்வதற்கும் குறைந்த பட்சக் கல்வித் தகுதி என்ன வைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அதற்கு டிரெயினிங் இருக்கிறது. எம்.பி.பி.எஸ். படித்திருக்க வேண்டும், டி.ஜி.ஓ. படித்திருக்க வேண்டும் எம்.பி.பி.எஸ். படித்திருந்தாலும், டி.ஜி.ஓ. படித்திருந்தாலும் அதற்கென்று இன்சர்விஸ் டிரெயினிங் கொடுத்து தான் அதைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

கோவை நகரிலுள்ள ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி.

* வினா எண். 151—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை நகரத்தில் உள்ள ஆரிய வைத்திய பார்மஸி என்ற ஆயுர் வைத்திய நிறுவனம் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஒன்று நடத்துகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்?

(இ) அக்கல்லூரிக்கு அரசு கொடுக்கிற உதவிகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஆம்.

(ஆ) 68 மாணவர்கள்.

(இ) இந்தக் கல்லூரிக்கு,இம்மாநில அரசு இதுவரை எவ்வித நிதி உதவியும் வழங்கவில்லை.

திரு. கு. ரமணி: : தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஆயுர்வேத வைத்திய முறை வளர்ந்து வருவதற்கு பயிற்சி பெற்ற மருத்துவர்களை உருவாக்குவதற்கு இந்தக் கல்லூரி முதன் முதலாக அமைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்தக், கல்லூரிக்கு அரசு நிதி உதவி ஏன் செய்யாமல் இருக்கிறது? அவர்களிடத்திலேயிருந்து அதைப்பற்றி அது சம்பந்தமாக வேண்டுகோள் வரவில்லையா அல்லது அரசே ஆயுர்வேத வைத்திய முறைக்கு செய்யத் தேவையில்லை என்று முடிவுக்கு வந்துவிட்டதா?